**செய்தி வெளியீடு**

**றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பும் ஸ்காபரோ வைத்தியசாலையும் முதலீட்டுக்கு முன்னதான திட்டம் பற்றிய ஆவணங்களை மைய கிழக்கு LHIN (Central East LHIN) க்குச் சமர்ப்பித்துள்ளன.**

ஜனவரி 23, 2014 - றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பும் (RVHS) ஸ்காபரோ வைத்தியசாலையும்(TSH) சமா்ப்பித்த முதலீட்டுக்கு முன்னதான திட்டமிடல் விண்ணப்பத்தை மையக் கிழக்கு உள்ளக சுகாதார இணைப்பு வலையாக்க(Central East LHIN) இயக்குநர் சபை நேற்றைய கூட்டத்தில் அங்கீகரித்துள்ளது.

இந்த விண்ணப்பம் தேவையான நிதியுதவியைப் பெறும்பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. நிதி, ஸ்காபரோவுக்கும் மேற்கு றூறாம் பகுதிக்கும்(ஏஜாக்ஸ், பிக்கரிங், விற்பி) உகந்த கட்டிடங்களைத் திட்டமிடவும் நிர்மாணிக்கவும் பயன்படுத்தப்படும்.

சுகாதாரம் மற்றும் நெடுங்காலப் பராமரிப்பு அமைச்சின் பொதுவான கட்டிட மதிப்பீட்டின் அடிப்படையில், இத் திட்டத்துக்கு ஏறத்தாழ $1 பில்லியன் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது அடுத்த 20 ஆண்டுகளுக்கு RVHS , TSH வைத்தியசாலைகளின் 4 கட்டிடங்களை ஏற்றுக்கொள்ளத்தக்க, இயங்கும் நிலையில் பராமரிப்பதற்கான செலவாகும்.

இது ஏற்கனவே அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களையோ அல்லது தற்போதைய தேவைகளையோ தரங்களையோ பூர்த்திசெய்வதற்காக உத்தேசிக்கப்படும் கட்டிடத் தரமுயர்த்தலுக்கான 0.5 பில்லியன் டாலர் செலவுகளையோ உள்ளடக்கவில்லை.

’எல்லா TSH, RVHS கட்டிடங்களிலும் அதி கவனம் எடுக்கவேண்டியுள்ளது’ என்றார் TSH இன் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான றொபேட் பைரன் அவா்கள். ’ஸ்காபரோ வைத்தியசாலை பொது வளாகக் கட்டிடங்களில் 35சதவீதமானவை 30-50 ஆண்டுகள் பழைமையானவை. 43சதவீதமானவை 50 ஆண்டுகளுக்கு மேலானவை. இது 1957ல் கட்டப்பட்ட அறுவைச் சிகிச்சை அறைகளையும் உள்ளடக்கும்.’

’மேலும் ஸ்காபரோ கட்டிடங்கள் திருத்தங்கள், பெருப்பித்தல் என்று பல மாற்றங்களுக்கு உள்ளாகியதால் திறமையான மருத்துவ சேவைகளுக்கு அவை உகந்ததாக இல்லை. பேர்மவுண்ட் வைத்தியசாலைக் கட்டிடங்கள் கட்டி 30 ஆண்டுகள் ஆகின்றன. அவற்றின் தரம் பிற ஒன்ராறியோ வைத்தியசாலைகளின் கட்டிடங்களின் தரத்துக்குக் குறைவாகவே இருக்கின்றது.’

’மேற்கு றூறாம் இல், றூஷ்வலி ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங் பகுதிகளில் கட்டிடங்கள் 30 சதவீத மக்களுக்கே போதுமானவையாக உள்ளன’ என்று RVHS தலைவரும் நிறைவேற்று அதிகாரியுமான Rik Ganderton விளக்கினார். ’RVHS Centenary மற்றும் TSH பேர்மவுண்ட் வளாக அவசர சிகிச்சைத் பிரிவுகள் தற்போது வருகைதரும் நோயாளர் தொகைக்கு ஈடுகொடுக்கமுடியாத அளவுக்குச் சிறிதாகவுள்ளது.

ஸ்காபரோ, றூஷ்வலி ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங் பகுதிகளில் கட்டிட முதலீடு அவசியமானது.'

இந்த அபிவிருத்திப் பணிகளில் இதுவே முதற்படி. அபிவிருத்தி வேலைகள் முடிவடையப் பல ஆண்டுகள் எடுக்கும். அவை பல நிலைகளில் நிறைவேற்றப்படும். இரு வைத்தியசாலைகளும் இப்பொழுது கோரும் நிதியுதவி ஆரம்பப் பணிகள், திட்டமிடல், கட்டிடங்கள் புதுப்பிப்பதற்கான வரைவு முதலியவற்றுக்கே ஆகும்.

பின்னணி

நவம்பர் 12ல் இரு வைத்தியசாலைக் கூட்டுத்தாபனங்களும் இணைவதற்குக் கொள்கை அளவில் ஒத்துக்கொண்டன. அதற்குச் சில நிபந்தனைகள் திருப்தியாக இருக்கவேண்டும் என்றும் அவை கருதின. அவற்றுள் பின்வருவனவும் அடங்கும்:

ஸ்காபரோவிலும் மேற்கு டூறாம் நிலையத்திலும் உள்ள அடிப்பபடைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டால்தான் இணைவதன் முழு நன்மைகளும் பெறப்படும் என்பதாலேயே கட்டிடத் திட்டங்களை முடிப்பதற்கு (ஸ்காபரோ சமூகத்துக்கு ஒன்று, மேற்கு டூறாம் சமூகத்துக்கு ஒன்று) நிதி கோரப்படுகின்றது.'

நவம்பர் 27ல் நடந்த கூட்டத்தில் மைய கிழக்கு LHIN இயக்குநர் சபை பின்வரும் பிரேரணையை முன்வைத்தது:

'ஏற்கனவே வழக்கத்தில் இருக்கும் மாகாணத்தின் முதலீட்டு முறையைக் கருத்திற்கொண்டும் வைத்தியசாலைகளின் ஊக்கத்திறனை உணர்ந்தும் மையக் கிழக்கு LHIN சபை, இணைப்புத் திட்டத்தின் இறுதி அறிக்கையில் வைத்தியசாலைகளின் கட்டிட வசதிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதுபற்றிக் குறிப்பிட்டதற்கு இணங்க, முதலீட்டுக்கு முன்னதான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் முயற்சியை நிறைவாக்கச் செய்யும் வண்ணம் ஸ்காபரோ மற்றும் றூஷ்வலி வைத்தியசாலைகளை ஊக்குவிக்கின்றோம்.'

பொதுவிபரம்

இணையப்பெற்ற RVHS-TSH அதிக வேலைப்பாடுகளைக் கொண்டிருப்பதோடு ஒன்ராறியோவில் நல்ல தாக்கத்தையும் உண்டுபண்ணக்கூடியதாக இருக்கும். அது –

- அன்றாட அறுவைச் சிகிச்சையில் முதலாவதாக விளங்கும்:75,000(ஓர் ஆண்டுக்கு)
- அவசர வருகைகளில் இரண்டாவதாக இருக்கும்: 235,000
- கடும் நோயாளரை வேறுபடுத்தலில் இரண்டாவதாக இருக்கும் (வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பப்படுகின்றவரும் வெளியேறுகின்றவரும்): 57,000

- தீவிர கவனிப்பு நாள்கள் (25,000), நடமாடும் கவனிப்பு (728,000), சராசரி கட்டில் உத்தியோகத்தர் (1,046) ஆகிய சேவைகளில் முதற் 10க்குள் இருக்கும்.
- மனநல வைத்தியம், உள்ளக நோயாளர் நாள்கள் (32,000), குணப்படுத்தல் (18,000), சிக்கலான தொடர் பராமரிப்பு (26,000) ஆகிய சேவைகளில் முதல் 25க்குள் இருக்கும்.

-30-

ரூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) ஓர் அதிசிறந்த தீவிர கவனிப்புச் சமூக வைத்தியசாலையாகும். 24/7/365 அவசர சேவை, மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மனநல வைத்தியம், பிராந்திய இருதய வைத்தியம் போன்ற சேவைகளை உள்ளடக்கிய பல திட்டங்களை அது கொண்டிருக்கும்.
ரூஷ்வலி வைத்தியசாலை இரண்டு சமூக வைத்திய வளாகங்களான, ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலை, மேற்கு டூறாமில் உள்ள ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங்கில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல சுகாதார நிலையங்களைக் கொண்டுள்ளது.
கனடாவில் அதிகம் பன்முகப்பட்ட மக்கள் வாழும் பகுதி ஒன்றில் அமைந்துள்ள ஸ்காபரோ வைத்தியசாலை(TSH) தனது இரண்டு வளாகங்கள் (பேச்மவுண்ட் வளாகம்/பொது வளாகம்) வாயிலாகவும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஆறு கிளை நிலையங்கள் வாயிலாகவும் நோயாளர் முதன்மைசார் கருணைச் சேவையை வழங்குகின்றது.
TSH ஒரு பிரதேச இரத்த மாற்று நிலையமாகும். அத்துடன் மனநோய் வைத்தியம், எலும்புச் சிகிச்சை, குழந்தை வைத்தியம், நெடுங்கால நோய்களைத் தடுத்தல், புற்றுநோய் மருத்துவம் போன்றவற்றுக்கு அது பெயர் பெற்றது.
ரோறன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள TSH குருதிக் குழாய் அறுவைச் சிகிச்சை, இதயத்துடிப்புச் சீராக்கம், கண்சிகிச்சை போன்றவற்றுக்குப் பிற வைத்திய சாலைகளிலிருந்து நோயாளர் அனுப்பப்படும் நிலையமாகவும் விளங்குகின்றது.

ஊடகத் தொடர்பு:
David Brazeau
Director, Public Affairs, Community Relations and Telecommunications,
Rouge Valley Health System
647-294-8885 dbrazeau@rougevalley.ca;

Holly-Ann Campbell
Director, Communications and Engagement
The Scarborough Hospital,
416-438-2911, ext. 8308 hocampbell@tsh.to